www.freetnbooks.com

# இரண்டாம் பருவத் தேர்வு - 2025

வகுப்பு : 6 **தமிழ்** பதிவு எண் :

காலம் : 2.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 60

**குறிப்புகள் :**

❖ மாணாக்கர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப் பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.

❖ விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.

❖ தேர்வெழுத நீலம் அல்லது கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4x1=4

1. பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக் கொள்வது .................. ஆகும்.

அ) வம்பு ஆ) அமைதி இ) அடக்கம் ஈ) பொறை

2. ‘போகிப்பண்டிகை’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................

அ) போகி+பண்டிகை ஆ) போ+பண்டிகை இ) போகு+பண்டிகை ஈ) போகிப்+பண்டிகை

3. ஆராயும் அறிவு உடையவர்கள் .................. சொற்களைப் பேசமாட்டார்கள்.

அ) உயர்வான ஆ) விலையற்ற இ) பயன்தராத ஈ) பயன்உடைய

4. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் ........................

அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 2x1=2

5. ‘உதித்த’ என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல் ..........................

6. போர்க்களத்தில் வெளிப்படும் குணம் ..........................

**III. பொருத்துக.** 4x1=4

7. விடிவெள்ளி – பஞ்சுமெத்தை
8. மணல் – ஊஞ்சல்
9. புயல் – கதிரவனின் ஒளி
10. கதிர்ச்சுடர் – விளக்கு

**IV. கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5x2=10

11. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும் ?
12. நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையாக நாட்டுபுறப் பாடல் கூறுவது யாது ?
13. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர் ?
14. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்துகள் எவை ?
15. ஆக்கம் யாரிடம் வழிகேட்டுக் செல்லும் ?
16. தமிழன் எதற்காகக் கண்டங்களைச் சுற்றி வந்தான் ?
17. வணிகம் என்றால் என்ன ?

**V. கீழ்க்காணும் வினாக்களுள் நான்கனுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 4x4=16

18. ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை ?
19. தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள் ?
20. காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர் ?
21. தமிழன் தான் வாழ்ந்த நாட்டினை எவ்வாறு உருவாக்கினான் ?
22. சிறுவணிகம், பெருவணிகம் – வேறுபடுத்துக.
23. இன எழுத்துகள் என்றால் என்ன ?



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

**VI. அடிபிறழாமல் எழுதுக.** 1x2=2

24. "வெள்ளத்து ..................." எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**VII. கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5x2=10

25. கீழே உள்ள சொற்களைச் சேர்த்துப் புதிய சொற்களை உருவாக்குக .

அ) பொன் + உண்டு –

ஆ) மண் + இல்லை –

26. தொடரை நீட்டி எழுதுக.

அ) நான் சென்றேன். (ஊருக்கு, நேற்று, பேருந்தில்)

ஆ) நான் படிப்பேன். (அறிவியல், பாடம், நன்றாக)

27. கலைச்சொல் தருக.

அ) Palace ஆ) Consumer

28. **இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.**

அ) உள்ளுவது உயர்வுள்ளல் எல்லாம் மற்றது
தள்ளாமை தள்ளினும் நீர்த்து.

29. **சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

அ) செல்வம் –

ஆ) கப்பல் –

30. **பின்வரும் நவமணிகளை அகரவரிசைப்படுத்தி எழுதுக.**

நீலம், கோமேதகம், மாணிக்கம், வைரம், பவளம், வைடூரியம், முத்து, புட்பராகம், மரகதம்

31. **கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

அ) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.

ஆ) அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை.

**VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 2x6=12

32. அ) அறிவுசால் ஔவையார் – என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

**(அல்லது)**

ஆ) உழைப்பே மூலதனம் கதையைச் சுருக்கி எழுதுக.

33. அ) **கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

பொங்கல் திருநாள்

**(அல்லது)**

ஆ) **கடிதம் எழுதுக.**

பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றதற்குப் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.



www.freetnbooks.com | FREETNBOOKS